## சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி

## S.C. No. 597/2023

## 03.04.2025

## P.W.1- உஷாகனி

**<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

எனது வீட்டுக்காரர் பெயர் ராஜேந்திரன் என்றால் சரிதான். எனது கணவர் ராஜேந்திரனும், அ.சா.2ன் மாமனார் போஸ், சிலம்பரசன், கொடியா ஆகிய நான்கு பேர்கள் எதிரி மற்றும் அவரது சகோதரர் சந்திரன் மற்றும் சிவக்குமார் மீது கிணற்றில் தண்ணீர் பாய்ச்சுவது சம்மந்தாக பிரச்சினை ஏற்பட்டு உசிலம்பட்டி, மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.14-2018 என வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். எனது அம்மாவை கரண்ட் அடித்ததாக யார் தகவல் சொன்னார் என்றால் எதிரி அவருக்கு பாத்தியமில்லாத இடத்திலிருந்து திருட்டுத்தனமாக எடுத்தார். அந்த வயரை கம்பம் வைத்து மேலாக எடுத்து செல்லாமல், எனது தோட்டத்தின் நடைபாதையில் தரையில் கொண்டு சென்றார். இதுசம்மந்தமாக நான் புகாரும் தெரிவித்திருந்தேன். சுமார் 15 முதல் 20 வருடங்களுக்கு மேலாக நடைபாதையில் எடுத்து சென்றார். 20 வருடத்திற்கு மேலாக வயர் இருந்ததால் வெயில் பட்டு வயர் வெடித்திருந்ததால், அதை எனது அம்மா தவறுலாக மிதித்து விட்டதால் கரண்டு பாய்ந்தது. நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் தற்போது கூறியதை போலீசார் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். சாட்டர் பெட்டிக்கும், மின்கம்பத்திற்கும் இடையே தான் தோட்டத்திற்கு செல்லும் பாதையுள்ளது என்றால் சரியல்ல, நடைபாதை வேறு பகுதியில் உள்ளது. அந்த பகுதியில் தான் மின்சார வயரை எதிரி கொண்டு சென்றார். அதே பாதையில் தான் கிணற்றில் உள்ள மோட்டாருக்கு வயர் செல்கிறது என்றால் சரியல்ல, அது தென்புறம் ஆகும். எனது அம்மாவை கரண்டு அடித்தது வடபுறம் ஆகும். நடைபாதை பெட்டிக்கு வடக்கே செல்கிறது. நடைபாதை என்பது பெட்டிக்கு தென்புறம் உள்ளது என்றால் சரியல்ல. அந்த இடத்தை எதிரி கட்டிடம் கட்டி



அடைத்து வைத்துள்ளார். அதில் நடந்து செல்ல வழியில்லாமல் உள்ளது. மேற்படி இடம் எதிரிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. கிணற்றிக்கு பொதுவான

இடம். நான் எனது அம்மாவை சம்பவம் நடந்து 6.05 மணிக்கு கேள்விபட்டு ஆட்டோவை அனுப்பி வைத்துவிட்டு பின்னால் நானும் தோட்டத்திற்கு சென்றேன். சம்பவ சமயத்தில் நான் நல்லமாபட்டியில் குடியிருந்தேன். நல்லமாபட்டிக்கும், தோட்டத்திற்கும் எவ்வளவு கி.மீ இருக்கும் என்றால் சுமார் 10 கி.மீ இருக்கும். நான் இருசக்கர வாகனத்தில் சென்றேன். 6.05 மணிக்கு ஆட்டோ அனுப்பி வைத்தேனா என்றால் சரியாக சொல்லமுடியானது சற்று முன்னும், பின்னும் இருக்கலாம். மருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு எனது தாயாரை சிகிச்சைக்கு சேர்த்தேன் என்றால் எனக்கு சரியாக ஞாபகமில்லை. சுமார் காலை 7.00 மணிக்குள்ளாக மருத்துவமனையில் சேர்த்தேன். புகாரை காவல் நிலையத்திற்கு சென்று தான் கொடுத்தேன். எனது அம்மாவை அனுப்பி வைத்தபிறகு தான் காவல் நிலையம் சென்றேன். எத்தனை மணி என்றால் எனக்கு ஞாபகமில்லை. புகாரை நான் விவரம் சொல்ல சொல்ல எனக்கு தெரிந்தவர்கள் எழுதி கொடுத்தார். அந்த புகார் எழுதியவர் புகாரில் கையெழுத்து செய்தாரா என்றால் இல்லை, நான் தான் கையெழுத்து செய்தேன். போலீசார் என்னை புகார் கொடுத்து 3 நாட்கள் கழித்து எனது அம்மாவை விசாரித்தார்கள். என்னை எப்போது விசாரித்தார்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. போலீசாரிடம் மற்றொரு நபர் எழுதிக்கொடுத்தார் என்று சொன்னேனா என்றால் இல்லை. எனக்கும், எதிரி குடும்பத்திற்கும் சிவில் வழக்கு இருப்பதால் எனது அம்மாவுக்கு ஏற்பட்ட வேறு வகையான காயத்தை பயன்படுத்தி பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் மின்சார வாரியத்தில் புகார் கொடுத்த நகலை போலீசார் விசாரணையில் கொடுத்தேனா என்றால் போலீசார் அது தேவையில்லை என சொன்னார்கள். எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சுசெய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது

ஒம் / P.S. ரஸ்கின் ராஜ்,
சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி

/ உண்மை நகல் /

சார்பு நீதிபதி
உசிலம்பட்டி.